பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

21 08 2026 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்தியாவும் ஜப்பானும் இணைந்து செயல்பட உறுதி பூண்டுள்ளன.

2. பிரிக்ஸ் நாடுகளின் தொலைத்தொடர்பு அமைச்சர்கள் மாநாடு இன்று புனே-யில் தொடங்க உள்ளது.

3. தேசிய தேர்வு முகமை நடத்தும் தேர்வு விடைகளை சரிபார்க்கும் நடைமுறைகள் மாணவர்களுக்கு நியாயமான தீர்வை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. அமெரிக்கா சமீபத்தில் விதித்துள்ள புதிய பொருளாதாரத் தடைகள் பொருளாதார பயங்கரவாதம் என்று ஈரான் கண்டித்துள்ளது.

5. உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்தியாவும் ஜப்பானும் இணைந்து செயல்பட உறுதி பூண்டுள்ளன.

இந்தியாவுக்கு வருகை தந்துள்ள ஜப்பான் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ஷின்ஜிரோ கொய்ஸுமி, நேற்று பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின் போது, இந்தியா மற்றும் ஜப்பான் இடையேயான சிறப்பு உத்திசார் மற்றும் கூட்டு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்த தனது தொலைநோக்குப் பார்வையைப் பகிர்ந்து கொண்டதாக சமூக வலைதளத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் அமைதி, ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதில் இரு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் பன்னாட்டுப் பாதுகாப்பு ஒத்துழைப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, 'இந்தியாவுக்கான உற்பத்தி இயக்கத்தின் கீழ் பாதுகாப்புத் துறையில் இணைந்து செயல்படுதல் மற்றும் உற்பத்தி போன்ற நடவடிக்கைகளில் இந்திய நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுடன் ஜப்பான் இணைந்து செயல்பட வாய்ப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையே உள்ள இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் கொய்ஸுமி, பிரதமரிடம் விளக்கியதுடன், இந்தியாவுடன் உறவுகளை வலுப்படுத்துவதில் ஜப்பான் அரசாங்கத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

கடந்த ஜூலை மாதம் இந்தியாவின் 16-வது இந்தியா-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாட்டிற்காக இந்தியாக்கு வருகை தந்திருந்த ஜப்பான் பிரதமர் திரு. சானே தகாய்ச்சியடன் தான் நடத்திய விரிவான ஆலோசனைகளையும் பிரதமர் நினைவுகூர்ந்தார்.

பிரிக்ஸ் நாடுகளின் தொலைத்தொடர்பு அமைச்சர்கள் மாநாடு இன்று புனே-யில் தொடங்க உள்ளது.

மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிராதித்ய சிந்தியா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், உறுப்பு நாடுகளைச் சேர்ந்த தொலைத்தொடர்பு அமைச்சர்கள் மற்றும் உயர் பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள்.

தகவல் தொடர்பு, டிஜிட்டல் தொழில்நுட்பம், புதுமை மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்க உள்ளனர்.

புதுமையை புகுத்துதல், ஒத்துழைத்தல் மற்றும் மாற்றியமைத்தல் என்பதே இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, இணையப் பாதுகாப்பு போன்ற முக்கிய விஷயங்கள் குறித்து பிரிக்ஸ் நாடுகள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள இந்த மாநாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

லடாக் பகுதியில் ஜம்மு-கஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் புதிய அமர்வை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இத்தகவலை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தனது சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

லடாக்கின் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் குடிமக்கள் தங்களுக்குரிய சட்ட சேவைகளைப் பெறுவதற்கான காலத்தைக் குறைப்பதன் மூலம், நீதித்துறைக்கான அணுகலை இந்த முடிவு கணிசமாக மேம்படுத்தும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், லடாக்கின் அனைத்து பரிமாணங்களிலான வளர்ச்சிக்கும், அரசியலமைப்பு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அரசு முழுமையாக உறுதுணையுடன் இருப்பதாகவும் திரு, அமித்ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய தேர்வு முகமை நடத்தும் தேர்வு விடைகளை சரிபார்க்கும் நடைமுறைகள் மாணவர்களுக்கு நியாயமான தீர்வை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய வினாக்களுக்கான விடைகளை அறிந்துகொள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கும்போது அது அதிக செலவாகும் என்பது தவறான தகவல் என்று தேர்வு முகமை கூறியுள்ளது.

உரிய விடைகளைத் தெரிந்துகொள்ள ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கலாம் என்றும், இதன் மூலம் பொறியியல் சேர்க்கைக்கான அகில இந்திய நுழைவுத் தேர்வு, மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு, யு.ஜி.சி. நெட் தேர்வு போன்ற தேர்வுகளை எழுதும் மாணவர்கள், தாங்கள் எழுதிய விடைகள் தவறு என்று மதிப்பெண் குறைக்கப்பட்டிருந்தால் ஆட்சேபனை தெரிவிக்க வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஆட்சேபனையை வினாத்தாள் தயாரித்த நிபுணர்கள் ஏற்றுக்கொண்டால் அதற்காக மாணவர்கள் செலுத்திய விண்ணப்பத் தொகை திருப்பித் தரப்படும் என்றும் தேர்வு முகமை கூறியுள்ளது.

<<<<>>>>

புதுதில்லி ஜந்தர்-மந்தர் பகுதியில் போராட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இடஒதுக்கீட்டில் சீர்திருத்தம் கோரி போராட்டம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல்கள் முற்றிலும் தவறானவை என்று தில்லி காவல்துறை தெளிவுபடுத்தியுள்ளது.

தில்லி மாவட்டத்தில் ஏற்கனவே தடை உத்தரவு அமலில் உள்ள நிலையில், போராட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் ஐந்துக்கும் மேற்பட்டோர் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

வதந்திகளைப் பரப்புவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் காவல்துறை எச்சரித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்கா சமீபத்தில் விதித்துள்ள புதிய பொருளாதாரத் தடைகள் பொருளாதார பயங்கரவாதம் என்று ஈரான் கண்டித்துள்ளது.

இந்தத் தடையை "பொருளாதார பயங்கரவாதம்" மற்றும் "மனிதமைக்கு எதிரான குற்றங்கள்" என்று வர்ணித்துள்ள அந்த அமைச்சகம், ஈரானிய மக்களுக்கு எதிரான விரோதப் போக்கை அமெரிக்கா பல தசாப்தங்களாகத் தொடர்ந்து வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்கா அறிவித்துள்ள இந்தப் புதிய தடைகள், ஈரானிய மக்களுக்கு எதிராக அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் கடந்த 73 ஆண்டுகளாகத் தொடரும் விரோதப் போக்கின் மற்றொரு வெளிப்பாடு ஆகும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது அமெரிக்காவின் ஆதிக்க மனப்பான்மையையும், சட்டவிரோதமான மற்றும் மனிதநேயமற்ற தன்மையையும் மீண்டும் நிரூபிப்பதாக ஈரான் வெளியுறத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

உலகத் தரத்திலான ரயில் தண்டவாளங்களை உருவாக்குவதன் வாயிலாக ரயில் போக்குவரத்து சேவைக்கு பிலாய் உருக்காலை பெரிதும் உதவி செய்து வருகிறது.

கடந்த 65 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் இந்த பொதுத்துறை நிறுவனம், நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Vijayakumar - 48 Sec)

<<<<>>>>

குடியுரிமை சட்டம் தொடர்பாக 2024ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசு உத்தரவு சில குறிப்பிட்ட மாநிலங்களுக்கும், யூனியன்பிரதேசங்களுக்கும் பொருந்தாது என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், மேற்குவங்கம், அசாம் மற்றும் திரிபுரா மாநிலத்தில் பழங்குடியின பகுதிகள் தவிர பிற பகுதிகள், ஜம்மு-கஷ்மீர், லடாக் ஆகிய யூனியன்பிரதேசங்களுக்கு இந்த உத்தரவில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

வடக்கு ஹாலந்தில் உள்ள Amstelbeen நகரில் நடைபெறும் இப்போட்டி, இந்திய நேரப்படி இரவு மணி 9.30க்கு தொடங்குகிறது.

--------------

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்திய வீரர்கள் இன்று சீன வீரர்களை எதிர்கொள்கின்றனர்.

(C/o)

புதுதில்லியில் நடைபெறும் இப்போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி இணை, சீனாவின் லியாங் வெய் கெங் மற்றும் வங் சாங் இணையை எதிர்கொள்ளவுள்ளனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் த்ரீசா ஜல்லி மற்றும் காயத்ரி கோபிசந்த் இணை, சீனாவின் ஜியா யி ஃபான் மற்றும் ஜாங் ஷு கியான் இணையைச் சந்திக்கவுள்ளனர்.

(C/o)

-------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

21 08 2026 7 15 Sports-2

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய சேலம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 140 ரன் எடுத்தது.

141 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய நெல்லை அணி 16 புள்ளி ஒரு ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 146 ரன் எடுத்தது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு போட்டியில் திருப்பூர் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் மதுரை அணியை வென்றது.

(C/o)

------------

ஈட்டி எறிதல் வீரர் ஷிவ்பால் சிங் தடை செய்யப்பட்ட 'மெத்தாண்டியனோன்' என்ற ஊக்கமருந்தைப் பயன்படுத்தியது பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளதால், தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமையின் ஒழுங்கு நடவடிக்கை குழுவால் 10 ஆண்டுகள் தடை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 2019 தோஹா ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர, மேலும் சில வீரர், வீராங்கனைகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

21 08 2026 7 15 Sports-3

தடகள வீராங்கனையான ஸ்வப்னா பர்மன், தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாகக் கண்டறியப்பட்டு, தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமையால் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2018 ஜகார்த்தா ஆசியப் போட்டிகளில் தங்கம் வென்றவர்.

வீராங்கனை எம்.வி. ஜில்னா, மெபென்டர்மின் ஊக்கமருந்து பரிசோதனையில் சிக்கியதால் இரண்டாவது முறையாக தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஹாக்கி வீரர் மயங்க் ஷர்மா 4 ஆண்டுகளும், 19 வயது ஓட்டப்பந்தய வீராங்கனை சஞ்சனா சிங் 5 ஆண்டுகளும் தடை செய்யப்பட்டுள்ளனர்.

<<<<The End>>>>